# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது:``உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில் வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை; அறிய முடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல் தளத்திலிருந்து அறிவியுங்கள். ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். (மத் 10: 26-29)

# ஜூன் 28-ல் ஆலயங்களில் திருப்பலி கொண்டாட்டங்கள் தொடங்குகின்றன

**கோலாலம்பூர்:** கொரோனா தொற்று நோயை முன்னிட்டு கடந்த சுமார் மூன்று மாதக் காலமாக ஆலயங்களில் தடை செய்யப்பட்டிருந்தத் திருப்பலிகள் கட்டம் கட்டமாக ஜூன் 28 முதல் தொடங்கப்படவுள்ளன என்று கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் மற்றும் பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் டத்தோ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களும் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

பல நிபந்தனைகளுடன், கட்டம் கட்டமாக அமுலாக்கம் செய்யப்படவுள்ள திருப்பலி மற்றும் இதர அருட்சாதனக் கொண்டாட்டங்கள் இறைமக்களுக்கு ஆறுதல் தரும் நற்செய்தியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி ஜூன் 28, ஞாயிறன்று முதல் திருப்பலி நமது ஆலயங்களில் தொடங்கும்.

தேசிய ஒற்றுமை துறை அமைச்சகம் மற்றும் தேசிய பாதுகாப்பு மன்றம் வழங்கிய முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு செய்முறைக்கேற்ப (SOP) பின்வருவன கடை பிடிக்கப்பட வேண்டும்:

1. எந்தவொரு வழிபாட்டிலும், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை வழிபாட்டுத் தலத்தின் (ஆலயத்தின் இட வசதிக்கேற்ப) மூன்றில் ஒரு பங்காக மட்டுமே இருக்க வேண்டும்.

2.காய்ச்சல், இருமல், சுவாச பிரச்சினைகள் மற்றும் சளி போன்ற அறிகுறிகள் கண்ட இறைமக்கள் ஆலயத்தில் வழிபாட்டில் பங்கேற்க இயலாது.. நீரிழிவு நோய், புற்றுநோய் மற்றும் பிற உடல்நலக் குறைவுள்ள இறைமக்களும் கலந்து கொள்ள ஊக்கு விக்கப்படவில்லை.

3. 70 வயதுக்கு மேற்பட்ட இறைமக்களும், 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளும் ஆலயத்தில் வழிபாட்டில் கலந்துகொள்வதற்கு அனுமதியில்லை. ஆனாலும் திருப்பலி கொண்டாடும் அருட்பணியாளருக்கு இந்த வயது கட்டுப்பாடு பொருந்தாது.

பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் அலுவலக அறிக்கை (சுருக்கம்)



4. இறைமக்கள் அனைவரும் ஆலயத்திற்குள் நுழைவதற்கு முன்பு வெப்பநிலை அறியப்பட்டு மற்றும் பெயர் பதிவுச் செய்ய வேண்டும். மேலும் சம்பந்தப்பட்டவர்களோடுத் தொடர்பு கொள்ள நேரிடும் வேளையில் தொடர்பு கொள்வதற்காகப் பெயர் மற்றும் வசிப்பிடமறியும் நோக்கத்திற்காகப் பெயர் பதிவு செய்யப்படும்.

**முதல் கட்டம்**

1. பங்குகளில் சிறப்பு பணிக்குழுவை அமைத்தல்.
2. திட்டமிடுதல், தயாரிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல், அறிவிப்பு அட்டைகள் மற்றும் உபகரணங்களைத் தயாரித்தல்.
3. சுத்தம்-சுகாதாரக் கவனிப்பு, வரவேற்பு, வெப்பநிலை ஸ்கேன் மற்றும் பெயர் பதிவு செய்தல், வழிபாட்டுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க தன்னார்வப் பணியாளர்கள் தேர்வுச் செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்குதல்

4. திருப்பலியில் பங்கெடுக்க அனுமதிக்கப்படுவோரைத் தேர்வுச் செய்வதற்கான வழிமுறைகளைப் பங்கு பேரவைகளோடு கலந்தாலோசித்தல்.

இக்காலக் கட்டத்தில், பொது மக்களுக்கான (பொது) திருப்பலிகளுக்கு அனுமதியில்லை.

ஆனாலும், நோயிற்பூசுதல் மற்றும் ஒப்புரவு (பாவசங்கீர்த்தனம்) ஆகிய இரண்டு அருட்சாதனங்களுக்கும் முன்கூட்டியே திகதி நியமனம் (Appointment) பெற வேண்டும்.

இல்லங்களில் மற்றும் இறப்பு கூடங்களில் இறுதிச் சடங்குகளுக்கு 15 பேருக்கு மேலான நபர்கள் கூட அனுமதி இல்லை.

**இரண்டாம் கட்டம்**

வாரத்திற்கு ஒரு திருப்பலி மட்டும் (ஞாயிற்றுக்கிழமைகளில்) கொண்டாடப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட இந்த செயல்பாட்டு செய்முறையை (SOP) மற்றும் வழிகாட்டுதல்களைச் சோதித்தறிதல், சீர்செய்தல் மற்றும் படிப்படியாக செயல்படுத்துதல் போன்றவை இந்த இரண்டாவது காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

மேலும், இக்காலக்கட்டத்தில், ஆலயத்தில் இறப்பு இறுதிச் சடங்குகள் நிறைவேற்றப்படும் நோயாளிகளுக்கு நோயிற்பூசுதலும் குழந்தைகளுக்கு திருமுழுக்கும் இல்லங்களில் கொண்டாட, முன்கூட்டியே திகதி நியமனம் வழி (appointment) நிறைவேற்றப்படும்

அத்தோடு, திருப்பலிக்கு முன் ஒப்புரவு (பாவசங்கீர்த்தனம்) மீண்டும் தொடங்கப்படும்.

**மூன்றாம் கட்டம்**

வார இறுதியில் கூடுதல் திருப்பலிகள் கொண்டாடப்பட ஆவன செய்யப்படும். இறுதிச் சடங்குகள், திருமணங்கள், பெரியவர்களின் திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் போன்றவை ஆலயத்தில் கொண்டாடப்படும்.

**நான்காம் கட்டம்**

தினசரி திருப்பலிகள் தொடங்கப்படும்..

**கவனத்திற்கு:**

மறைக்கல்வி வகுப்புகள், முதியோர்க்கான புகுமுக அருட்சாதன வகுப்புகள் (RCIA), பங்களவிலான கூட்டங்கள், அ.தி.ச. கூட்டங்கள் மற்றும் உருவாக்கப் பயிற்சிகள் அடுத்த அறிவிப்பு வரை தடைசெய்யப்பட்டுள்ளன. பணிக்குழுக்களும் இதர குழுக்களும் தங்களது நடவடிக்கைகளை பல்லூடகத் தொடர்பு சாதனங்கள் (இணையம்) வழி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறன.

*-கோலாலம்பூர் மாமறைமாவட்ட அலுவலக அறிக்கையின் தழுவல்*

# உடன்பிறந்த உணர்வின்றி, திருப்பலியில் பங்குபெற முடியாது

**வத்திக்கான்:** கிறிஸ்துவின் தூய்மைமிகு திரு உடல், திரு இரத்தம் பெருவிழாவையொட்டி, கடந்த ஞாயிறு காலை, வத்திக்கான், புனித பேதுரு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றியபின், அங்குக் கூடியிருந்த மக்களுக்கு மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவின் திரு உடல், திரு இரத்தம் குறித்து புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் மடலில் குறிப்பிட்டுள்ளதை (1 கொரி. 10:16-17) சுட்டிக்காட்டினார்.

திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுதல், மற்றும், அப்பத்தைப்பிட்டு உண்ணுதல் வழியாக, கிறிஸ்துவின் இரத்தத்திலும், கிறிஸ்துவின் உடலிலும் பங்குகொள்ளும் நாம், பலராயினும், ஒரே உடலாய் இருக்கிறோம் என, புனித பவுல் கூறும் வார்த்தைகளுக்கு விளக்கமளித்தத் திருத்தந்தை பிரான்சிஸ், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம் என்று மேலும் கூறினார்.

நமக்கு ஊட்டச் சத்தாகவும், நம்மை புதுப்பிக்கும் வல்லமையாகவும் இருந்து, நாம் விழுந்தால், மீண்டும் எழுந்து நடக்க வல்லமை தருபவராகவும், திருநற்கருணையில் குடிகொண்டிருக்கும் இயேசு, நாம் முற்றிலுமாக மாற்றப்படுவதற்கு நம் சம்மதத்தை எதிர்பார்க்கிறார் எனவும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒரே அப்பம் உடைக்கப்பட்டு, பகிரப்படும் போது, நாமனைவரும் ஒரே உடலாக மாறுகிறோம் என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொருவரும், உடன் பிறந்த உணர்வுக்கென தங்களையே அர்ப்பணிக்காமல், திருநற்கருணை வழிபாட்டில் பங்குபெற முடியாது எனவும் கூறினார்.



இவ்வாறு, உடன்பிறந்த உணர்வுடன் நாம் வாழ்வதற்கு, நம் மனித வல்லமை மட்டும் போதாது என்பதாலேயே, திருநற்கருணையில் நமக்காக இயேசு குடிகொண்டிருக்கிறார், அதன் வழியாக நமக்கு உடன்பிறந்த உணர்வின் அன்பை வழங்கிக்கொண்டிருக்கிறார் என, மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ். திருநற்கருணை வழியாக இரண்டு விதமான கனிகளைப் பெறுகிறோம், கிறிஸ்துவால் ஊட்டம்பெற்று அவரோடு ஒன்றிணையும் நாம், அதன்பின், கிறிஸ்தவ சமுதாயத்தையும் புதுப்பிக்கிறோம் என, தமது மறையுரையில் எடுத்துரைத்தார்.

# முதியோர் கவனிப்பு இன்றி இளையோருக்கு சிறந்த எதிர்காலம் இல்லை...திருத்தந்தை

**வத்திக்கான்**: முதியோர் மீது நாம் சரியான அக்கறை காட்டவில்லை யெனில், இளையோருக்கு வருங்காலம் என்பது இல்லாமல் போய்விடும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்

முதியோரின் உரிமைகள் மீறப்படுவதற்கு எதிரான உலக விழிப்புணர்வு நாள் ஜூன் மாதம் 15ம் தேதி, ஐ.நா. நிறுவனத்தால் சிறப்பிக்கப்பட்டதையொட்டி, சமுதாயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்தத் திங்களன்று வெளியிட்டுள்ள இரண்டாவது டுவிட்டர் செய்தியில், நாமனைவரும் கடவுளின் அன்பு குழந்தைகள் என்பதை, நம் ஒன்றிப்பின் மூலகாரணமாக இருக்கும் தூய ஆவியாரே நமக்கு நினைவூட்டுகிறார், நாமனைவரும் சகோதர சகோதரிகள் என கூறியுள்ளார்.

மேலும், கிறிஸ்துவின் தூய்மைமிகு திரு



முதியோரின் முக்கியத்துவம் குறித்து டுவிட்டர் செய்தியொன்றை இத்திங்களன்று வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

முதியோரின் உடல் பலவீனங்களையும், மாண்பையும் சரியான முறையில் மதித்து, சமுதாயத்தில் ஒன்றிணைக்கும் கட்டமைப்புகளை நம் சமுதாயம் கொண்டிருக்கவில்லை என்பதை, கோவிட்-19 கொள்ளை நோய்க் காலம் நமக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது, என தமது டுவிட்டரில் கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதியோர் மீது நாம் சரியான அக்கறை காட்டவில்லையெனில், இளையோருக்கு வருங்காலம் என்பது இல்லாமல் போய்விடும், என அதில் மேலும் கூறியுள்ளார்.

உடல், திரு இரத்தம் பெருவிழாவான கடந்த ஞாயிறன்று 6 டுவிட்டர் செய்திகளை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் லிபியாவில் அமைதி நிலவ, அனைத்துலக பொறுப்பிலுள்ளோர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்து ஒரு டுவிட்டரையும், இரத்ததான நிகழ்வில் பங்கு பெறுவோர் அனைவரையும் பாராட்டி இரத்ததான தினம் குறித்த விழிப்புணர்வை குறிப்பிட்டு ஒரு டுவிட்டரையும் வெளியிட்டுள்ளார்.

ஏனைய நான்கு டுவிட்டர்களிலும், கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தம் குறித்த முக்கியக் கூறுகளை எடுத்துரைத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

*வத்திக்கான் செய்திகள்.*

# கோவிட் 19க்குப்பின் திருஅவை உருவாக்கும் எதிர்காலம்

**வத்திக்கான்**; தொற்றுக்கிருமியின் விளைவுகளிலிருந்து ஐரோப்பா மீண்டுவரும் வேளையில், அமெரிக்க கண்டம், குறிப்பாக, இலத்தீன் அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் நிலை வேறுபட்டதாக உள்ளது.

கோவிட் 19 தொற்றுக்கிருமியின் தாக்கத்திலிருந்து இவ்வுலகம் சிறிது சிறிதாக வெளியேறிக்கொண்டிருக்கும் வேளையில், எதிர்காலத்தை, கத்தோலிக்கத் திருஅவை எவ்வாறு கண்ணோக்கும் என்ற கருத்தை மையப்படுத்தி, ஜூன் 9 கடந்தச் செவ்வாயன்று வத்திக்கான் செய்தித்துறை ஒரு செய்தியாளர்கள் கூட்டத்தை நடத்தியது.



*கர்தினால் பீட்டர் டர்க்சன்*

"கோவிட் 19 நேரத்தில், தலத்திருஅவைகளின் வழியே, எதிர்காலத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பில், இணையதளம் வழியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பில், ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள், உலக காரித்தாஸ் அமைப்பின் பொதுச் செயலர் திருவாளர் அலோய்சியஸ் ஜான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த தொற்றுக்கிருமியின் விளைவுகளிலிருந்து ஐரோப்பா மீண்டு வரும் வேளையில், அமெரிக்க கண்டம், குறிப்பாக, இலத்தீன் அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் நிலை வேறுபட்டதாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிய கர்தினால் டர்க்சன் "அனைத்து நாடுகளுக்கும் சமமான உதவிகள் கிடைத்தால் மட்டுமே, இந்த நெருக்கடியை நாம் ஒருங்கிணைந்து முறியடிக்கமுடியும் என்று கூறினார்.

காரித்தாஸ் அமைப்பு, உலகெங்கிலும் 20க்கும் மேற்பட்ட செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளது என்பதைக் குறித்து பேசிய ஜான், இந்த செயல்திட்டங்களில், குழந்தைகள், பெண்கள் மற்றும் சமுதாயத்தில் மிகவும் நலிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதையும் சுட்டிக்காட்டினார்.

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, இந்தியாவில் கொண்டுவரப்பட்ட முழு ஊரடங்கு அடைப்பினால், மிக அதிகமான துன்பங்களை அடைந்துவரும் புலம்பெயர் தொழிலாளிகளுக்குத் தேவையான அடிப்படை உதவிகள் செய்வது, இந்திய காரித்தாஸின் முதன்மைப்பணியாக உள்ளது என்பதை, ஜான் அவர்கள், தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டார்.

சரியான தகவல்களை வழங்குதல், மிகவும் நலிந்த சமுதாயத்தினருக்கு உணவும் உறைவிடமும் வழங்குதல், மற்றும், இந்த தொற்றுக்கிருமியின் தாக்கத்தைக் குறைக்கத் தேவையான மருத்துவ உதவிகள் வழங்குதல் ஆகிய மூன்று வழிகளில் காரித்தாஸ் தன் கவனத்தை திருப்பியுள்ளது என்பதையும், காரித்தாஸ் பொதுச் செயலர் ஜான் அவர்கள் எடுத்துரைத்தார்.

-

*கர்தினால் டர்க்சன்*

*ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்*

### 1,000 குடும்பங்களுக்கு பசியாற்றும் ஆயர் பேரவை



கொரோனா தொற்றுநோய்க் காலத்தில் உருவான, சமூக, மற்றும், பொருளாதார சீர்கேடுகளை சரி செய்யும் நோக்கத்தில், 'பசியற்ற குடும்பம்' என்ற திட்டத்தை ஏப்ரல் மாதம் 23ம் தேதி துவக்கி வைத்த மெக்சிகோ ஆயர்கள், இதனால் தற்போது 61,000 குடும்பங்கள் பசியின்றி வாழ முடிகின்றது என்று கூறியுள்ளனர்.

### இயற்கை எய்திய அருட்தந்தை O.C. லிம் அவர்களின் இறுதிச் சடங்கு நிறைவேறியது

கோலாலம்பூர்: கடந்த ஜூன் திங்கள் 5-ஆம் திகதி பந்தாய் மெடிக்கல் சென்டரில் மரணமுற்ற Fr. O.C. லிம் என்று அழைக்கப்பட்ட அருட்தந்தை அந்தோணி லிம் அவர்களின் இறுதிச் சடங்கு பேராயர் ஜூலியன் அவர்களின் தலைமையில் நிறைவேற்றப்பட்டு, நீலாய் Xiau En Memorial Park-ல் அருட்தந்தையின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.



# அஞ்சாதீர்கள், ஆண்டவர் என்றும் நம்மோடு

இன்றைய நற்செய்தியை வாசிக்கும் போது, ஓர் இனம் புரியாதத் துணிவு வருவதை மறுப்பதற்கில்லை.காரணம் 'அஞ்சாதீர்கள்' என்ற ஆண்டவரின் வார்த்தைதான்.

மத்தேயு எழுதிய நற்செய்தி நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, 'அஞ்சாதீர்கள்' எனச் சொல்கிறார். ஒருமுறையோ, இருமுறையோ அல்ல, மூன்றுமுறை சொல்கிறார். இதன் அர்த்தம் நாம் ஆண்டவரைத் தவிர வேறு எதற்கும் பயப்படக்கூடாது என்பதே ஆகும். எது எதற்கெல்லாம், யாருக்கெல்லாம் பயப்படக் கூடாது என்பதையும் ஆண்டவர் இயேசு குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

அன்று, ஆண்டவருடைய வார்த்தைக்கு எதிராகப் பரிசேயர், சதுசேயர் மதக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் போன்றோர் அவரை எதிர்த்தனர். அவர்களுக்கு நீங்கள் அஞ்சவேண்டாம் என்று தம் சீடர்களுக்குத் தைரியம் ஊட்டுகிறார் சீடர்கள் இயேசுவோடு இருந்தபோது அவர்களுக்கு பயமோ, அச்சமோ இருந்ததில்லை. ஆனால் இப்போது இயேசு அவர்களை விட்டு பிரியும் நேரம் நெருங்கி வருவதால், தம் பணிகளை அவர்கள் துணிச்சலோடு நிறைவேற்ற வேண்டும் என அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்.

இதன் விளைவாக ஆண்டவர், பன்னிருவரையும் தம்மிடம் வரழைத்து தீய ஆவிகளை ஓட்டவும் ,நோய்களை குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறார் அதுப்போலவே, எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக் கொண்டது .நாமும் ஒருநாள் மரணிப்போம் அந்த மரணம் கிறிஸ்துவுக்காகவே இருக்க வேண்டும்

இன்றைய முதல் வாசககத்தில், ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப்போல என்னோடு இருக்கிறார், . எனவே என்னை துன்புறுத்துவோர் இடறி விழுவார்" என இறைவாக்கினர் எரேமியா கூறுகிறார் . எனவே ஆன்மாவை கொல்ல இயலாமல் , உடலை மட்டும் கொள்பவர்களுக்கு அஞ்சவேண்டாம் .ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள் என்று நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. .

இயேசு தன்னுடைய பணிவாழ்வில் தனக்கெதிராக வந்த விமர்சனங்களைக் கண்டு பயப்படவே இல்லை. மக்கள் அவரை பேய்களின் தலைவனாகிய பெயல் செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான், பெருந்தீனிக்காரன், பாவிகளின் நண்பன் என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். அவற்றையெல்லாம் இயேசு கண்டு பயப்படவில்லை. காரணம் அவற்றில் உண்மையில்லை. எல்லா விமர்சனங்களும் பொறாமையின் அடிப்படையில் எழுந்தவை. ஆகவே, நாமும் ஆண்டவர் இயேசுவைப் போன்று நம்மீது சுமத்தப்படும் தேவையற்ற விமர்சனங்களைக் கண்டு பயம்கொள்ளாமல், துணிந்து நடக்கும் குணத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் இயேசு நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதாக இருக்கின்றது.

திருப்பாடல் ஆசிரியர் கூறுவார், "சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேரிட்டாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்" என்று (திபா 23:4). ஆம், இறைவன் நம் அருகே இருக்கிறார் என்பதை உணர்வோம். நம்மீது விழும் தேவையற்ற விமர்சனங்களை புறந்தள்ளுவோம், நம்மை அச்சுறுத்தும் மனிதர்களைக் கண்டு கலங்கிடாது துணிவோடு வாழ்வோம். அதன்வழியாக இறையருள் பெறுவோம்.

ஆம், வாழ்க்கை என்ற கப்பலை தலைவராகிய ஆண்டவர் ஓட்டிக்கொண்டு போகும்போது நாம் எதற்கு அஞ்சி நடுங்கவேண்டும்.

*-ASP-ஜேம்ஸ் நாதன். ஸ்ரீ செர்டாங்*

**பொதுக்காலம் 12-ஆம் ஞாயிறு**

எரே 20: 10-13
திபா 69: 7-9. 13,16. 32-34
உரோ 5: 12-15
மத் 10: 26-33

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**